**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஈரோடு**

முன்னிலை : திரு.R.வாஞ்சிநாதன்., B.A., B.L.,(Hons)., L.L.M., P.G.D in J.J & J.P

நீதித்துறை நடுவர் எண்.1, ஈரோடு

2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 06–ம் நாள் சனிக்கிழமை

(2057 திருவள்ளுவராண்டு, பராபவ வருடம், வைகாசி மாதம் 23–ம் நாள்)

**CNR.No.TNED040102772021**

**சுருக்கு விசாரணை வழக்கு எண்.2336/2021**

அரசுக்காக,
காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்,
கருங்கல்பாளையம் காவல் நிலையம், ஈரோடு,
குற்ற எண்.72/2020 ... குற்றமுறையீட்டாளர்

/ எதிர்/

பாண்டியராஜன் (வயது 35/2026),
த/பெ. சண்முகம்,
19, ராஜாகோபால் தோட்டம்,
கருங்கல்பாளையம்,
ஈரோடு. ... குற்றஞ்சாட்டப்பட்டவர்

| வரிசை எண் | விளக்கம் | விவரங்கள் | |
|---|---|---|---|
| 1. | சம்பவம் நடந்த நாள் | 12.02.2020 | |
| 2. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 12.02.2020 | |
| 3. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப் பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | -- | 03.03.2020 (மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுள்ளார்) |
| 4. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 20.09.2021 | |
| 5. | குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 24.04.2023 | |
| 6. | கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் | 1) Crl.M.P.No.283/2020–ல் கு.வி.மு.ச பிரிவு 438–ன் கீழான முன்பிணை மனு கடந்த | |



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.06 16:14:17 +0530

<table>
<tr><td></td><td>மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="6">20.02.2020–ம் தேதி ஈரோடு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>2) அரசு தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட M.P.No.6/2026–ல் மனு கடந்த 18.05.2026–ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td rowspan="5">7.</td><td rowspan="5">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td colspan="2">சாட்சிகள்</td><td colspan="2">முதல் விசாரணை</td><td colspan="2">குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td colspan="2">அ.சா.1</td><td colspan="2">02.02.2026</td><td colspan="2">இல்லை</td></tr>
<tr><td colspan="2">அ.சா.2</td><td colspan="2">02.02.2026</td><td colspan="2">இல்லை</td></tr>
<tr><td colspan="2">அ.சா.3</td><td colspan="2">27.04.2026</td><td colspan="2">இல்லை</td></tr>
<tr><td colspan="2">அ.சா.4</td><td colspan="2">18.05.2026</td><td colspan="2">18.05.2026</td></tr>
<tr><td>8.</td><td>எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(பி)–ன் கீழ் வினவிய நாள்</td><td colspan="6">03.06.2026</td></tr>
<tr><td rowspan="2">9.</td><td rowspan="2">எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்</td><td colspan="3">பிடியாணை வழங்கப்பட்ட நாள்</td><td colspan="3">பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள்</td></tr>
<tr><td colspan="3">19.06.2023</td><td colspan="3">14.08.2023</td></tr>
<tr><td>10.</td><td>வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள்</td><td colspan="6">03.06.2026</td></tr>
<tr><td>11.</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td colspan="6">06.06.2026</td></tr>
</table>

இவ்வழக்கானது கடந்த 29.09.2021–ம் தேதி, STC.No.2336/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டும், எதிரிக்கு எதிராக அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை 2 திருமதி.N.அனிதா அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்ட எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.D.ராஜா அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள் வரை பரிசீலனையிலிருந்து வந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்,



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.06 16:14:23 +0530

**-<u>தீர்ப்புரை</u>-**

இந்த வழக்கு குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 173(2) இன் படி தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

கடந்த 12.02.2020-ம் தேதி, 18.15 மணிக்கு, ஈரோடு, கருங்கல்பாளையம், காவேரி ரோடு, SBI ATM முன்பு எதிரி பாண்டியராஜன் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட வெளி மாநில லாட்டரி சீட்டின் நெம்பர்களை துண்டு வெள்ளை தாளில் எழுதி விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவு 5 r/w 7(3) TNLR Act-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக கருங்கல்பாளையம் காவல் நிலைய காவல் சிறப்பு உதவி ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களையும் குற்ற அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும் பரிசீலனை செய்து பார்த்ததில், எதிரிக்கு எதிராக புலன் கொள்ளக்கூடிய குற்றங்கள் விசாரணைக்கு எடுக்க முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவு 5 r/w 7(3) TNLR Act-ன் படியான குற்றத்தை விசாரணைக்கு எடுத்து குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 190 (1) (b) ன் படி உத்தரவிடப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. குற்றஞ்சாட்டப்பட்டவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், குற்றஞ்சாட்டப்பட்டவர்க்கு வழக்கில் உள்ள ஆவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறை சட்டத்தின் படி இலவசமாக வழங்கப்பட்டன.

4. போதிய அவகாசம் கொடுக்கப்பட்டு குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 251-ன் படி எதிரி மீது சட்டப்பிரிவு 5 r/w 7(3) TNLR Act-ன் கீழ் குற்றங்கள் விளக்கிக் கூறி வினவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தினை மறுத்த காரணத்தினால் குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 254-ன் படி அரசு



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.06 16:14:30 +0530

தரப்பில் சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் பட்டியலிடப்பட்ட 7 சாட்சிகளில், 4 சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>அரசு தரப்பு சாட்சிகளிலிருந்து தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

6. கடந்த 12.02.2020–ம் தேதி, மாலை 18.45 மணியளவில், சாட்சி–1 திரு.கணேசன் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த அ.சா.ஆ.3 எழுத்து மூலமான புகாரை சாட்சி–6 சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.செல்லமுத்து பெற்று நிலைய குற்ற எண்.72/2020, சட்டப்பிரிவு 387 இதச மற்றும் 5 r/w 7(3) TNLR Act ன் கீழ் அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அசல் புகாரையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் எண். 1 க்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

(ii) பின்னர் சாட்சி–7 சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.தயாளன் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே மாலை 19.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் அ.சா.2 திரு.சையது உசைன், அ.சா.1 திரு.சிரஞ்சீவி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்து கையொப்பம் பெற்றும், வழக்கு சாட்சிகள் சாட்சி–1 திரு.கணேசன், சாட்சி–2 திரு.வெங்கட்ராமன், அ.சா.3 திரு.தங்கமணி, அ.சா.1 திரு.சிரஞ்சீவி, அ.சா.2 திரு.சையது உசைன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரியை தேடிய போது மாண்புமிகு அமர்வு நீதிமன்றம் ஈரோடு அவர்கள் முன்பாக முன்ஜாமின் மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டதால் கைது செய்யவில்லை என்றும், இத்துடன் அவரது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது 5 r/w 7(3) TNLR Act ன் வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.06 16:14:36 +0530

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள பகுதியை விளக்கி குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 313 (1) (பி)–ன் கீழ் வினவ குற்றஞ்சாட்டப்பட்டவர் சாட்சிகளின் சாட்சியங்களை பொய் சாட்சி என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என தெரிவித்துள்ளார். எனவே எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படாததால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**இந்த வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை:–**

8. இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 5 r/w 7(3) TNLR Act–ன் கீழான குற்றங்கள் எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

**தீர்வு:–**

9. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், மேலும் அரசுதரப்பு வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும், எனவே அரசுதரப்பு வழக்கு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாத காரணத்தினால் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. அரசுதரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் தனது வாதத்தில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளபோதும், இந்த வழக்கில் புலன்விசாரணை அலுவலர் அ.சா.4 அரசுதரப்பு வழக்கை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளதால் எதிரி மீதான குற்றங்கள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.06 16:14:42 +0530

11. அ.சா.1 மற்றும் அ.சா.2 இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சிகள் என்பதும், அ.சா.3 சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி என்பதும், அ.சா.4 தற்போதைய கருங்கல்பாளையம் காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் என்பதும் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலிக்கும் போது தெரியவருகிறது.

12. சாட்சி–1 திரு.கணேசனின் வேலைக்காக கருங்கல்பாளையம் போனபோது கருங்கல்பாளையத்தை சேர்ந்த பாண்டியராஜன் சாட்சி–1 க்கு அறிமுகம் ஆனார் என்றும், பாண்டியராஜன் சாட்சி–1 யிடம் வந்து தான் வெளிமாநில லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்து வருவதாகவும் சாட்சி–1 யையும் வாங்குமாறு கேட்டு இருந்ததாகவும், சாட்சி–1 முதலில் வேண்டாம் என சொல்லி இருந்ததாகவும், பலமுறை சாட்சி–1 யிடம் கேட்டதால் சாட்சி–1–ம் அவரிடம் லாட்டரி சீட்டுக்கள் வாங்கி இருந்ததாகவும், லாட்டரி சீட்டின் நெம்பர்களை துண்டு வெள்ளை பேப்பரில் எழுதி கொடுப்பார் என்றும், மறுநாள் சென்று பரிசு விழுந்துள்ளதா என கேட்டால் அவர் வைத்திருக்கும் நோட்டை பார்த்து சொல்வார் என்றும், 12.02.2020–ம் தேதி, மாலை 6.15 மணிக்கு, சாட்சி–1 தனது சொந்த வேலையாக ஈரோடு காவேரி ரோடு SBI ATM அருகே சென்ற போது அங்கே இருந்த பாண்டியராஜன் சாட்சி–1–யிடம் வந்து லாட்டரி சீட்டு வாங்குமாறு கேட்டதாகவும், சாட்சி–1–யிடம் பணம் இல்லாததால் சாட்சி–1 லாட்டரி சீட்டு வேண்டாம் என சொன்னதாகவும், உடனே பாண்டியராஜன் சாட்சி–1–யை பார்த்து நான் சொன்னா கேட்கமாட்டியா நான் யார் தெரியுமா கருங்கல்பாளையம் ஏரியாவில் என் பெயரை கேட்டாலே ஏரியாவே நடுங்கும் நான் பெரிய ரவுடி நான் கேட்கும் போதெல்லாம் நீ லாட்டரி சீட்டுகள் வாங்க வேண்டும் இல்லையென்றால், மாசம் மாசம் பணம் கொடுக்கணும் இல்லையென்றால், உன் கை கால்களை உடைத்து காவேரி ஆற்றில் வீசி விடுவேன் என மிரட்டியதாகவும், உடனே இதை பார்த்து கொண்டிருந்தவர்கள் சத்தம் போடவே பாண்டியராஜன் அங்கிருந்து போய்விட்டதாகவும், சாட்சி–1 க்கு பயமாக இருந்ததால் உயிர் பயத்தை ஏற்படுத்திய பாண்டியராஜன் மீது நடவடிக்கை எடுக்கும்படி அ.சா.ஆ.3–ன் படி சாட்சி–1 திரு.கணேசன் புகார் அளித்ததன் அடிப்படையில் எதிரி மீது அ.சா.ஆ.4–ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.06 16:14:48 +0530

13. ஆனால் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான சாட்சி–1 திரு.கணேசன் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள இடத்தில் வசிக்கவில்லை என கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கியுள்ளதால், அவர் சாட்சியாக அரசுதரப்பில் விசாரிக்கப்படவில்லை.

14. பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.1 திரு.சிரஞ்சீவி மற்றும் அ.சா.2 திரு.சையது உசேன் ஆகியோர் தங்களுடைய சாட்சியத்தில் தங்களிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரிலுள்ள கையெழுத்து தங்களுடையது தான் என்றும், தாங்கள் ஒரு வேலையாக காவல்நிலையம் சென்றபோது போலீசார் தங்களை விசாரித்து பெயர், முகவரி வாங்கி கையொப்பம் பெற்றனர் என்றும், வழக்கு குறித்து வேறு எந்த விவரமும் தங்களுக்கு தெரியாது என்றும், போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டு, அரசுதரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோதும், அரசு தரப்புக்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் பெறப்படவில்லை. மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2–ன் சாட்சியங்களை பரிசீலித்து பார்க்கும்போது உண்மையில் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்களா என்பது சந்தேகத்திற்கு உரிய சங்கதியாக உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.3 திரு.தங்கமணி தன்னுடைய சாட்சியத்தில் எதிரி பாண்டியராஜன் என்பவரை தனக்கு தெரியாது என்றும், இவ்வழக்கு பற்றி தனக்கு எந்த விபரமும் தெரியாது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் மட்டும் செய்ததாகவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று கூறி அரசுதரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு, அரசுதரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோதும், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் எவ்வித சாட்சியமும் பெறப்படாதது அரசுதரப்பு வழக்கில் மேலும் சந்தேகத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.06 16:14:54 +0530

16. மேற்படி இவ்வழக்கின் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக மாறியுள்ள நிலையில் தற்போது எஞ்சி இருப்பது இந்த வழக்கின் புலன் ஆய்வு அலுவலருக்கு பதிலாக சாட்சியம் அளித்த தற்போதைய கருங்கல்பாளையம் காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளரான அ.சா.4–ன் சாட்சியம் மட்டுமே ஆகும். அ.சா.4 மூலமாக அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சாட்சி–1 திரு.கணேசன் அளித்த அ.சா.ஆ.3 புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டு எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து அ.சா.4–ன் சாட்சியம் அமைந்துள்ளதேயன்றி எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யக்கூடிய வகையில் அவரது சாட்சியம் அமைந்திருக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இவ்வழக்கில் லாட்டரி சீட்டுகளோ அல்லது லாட்டரி சீட்டு விற்ற பணமோ புலன்விசாரணை அதிகாரியால் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்படாததும் வழக்கில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே அ.சா.4–ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாக முடிவுக்கு வர இயலாது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. இறுதியாக, மேலே ஆராய்ந்த வகையில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளானது அரசுதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலனை எதிரிக்கு வழங்கி, 5 r/w 7(3) TNLR Act–ன் கீழான குற்றச்சாட்டுகளைப் பொறுத்து எதிரி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 255(1)–ன் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

18. வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் எதிரி பிணையில் இருந்ததால்



VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.06 16:15:01 +0530

எதிரியும், பிணையதாரர்களும் சேர்ந்து எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் ரத்து செய்யப்படுகின்றது.

19. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் அது குறித்து உத்தரவு ஏதுமில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, மீண்டும் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 06–ம் நாளான இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2026.06.06 16:15:07 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு

**இணைப்பு**

**அரசு தரப்பு சாட்சிகள் :**

| வரிசை எண். | அரசுதரப்பு சாட்சி எண். | பெயர் | விவரிப்பு |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.சிரஞ்சீவி | பார்வை மகஜர் சாட்சி |
| 2. | அ.சா.2 | திரு.சையது உசேன் | பார்வை மகஜர் சாட்சி |
| 3. | அ.சா.3 | திரு.தங்கமணி | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| 4. | அ.சா.4 | திரு.தங்கராஜ் | விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| வரிசை எண். | அரசு தரப்பு சான்றாவணம் எண். | குறியீடு செய்யப்பட்ட தேதி | குறியீடு செய்யப்பட்ட ஆவணம் | யாரால் சான்றாவணம் நிரூபிக்கப்பட்டது /சான்றொப்பம் இடப்பட்டது |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 02.02.2026 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.1–ன் இரண்டாவது கையெழுத்து | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | 02.02.2026 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.2–ன் முதலாவது கையெழுத்து | அ.சா.2 |



VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2026.06.06 16:15:13 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | அ.சா.ஆ.3 | 18.05.2026 | புகார் | அ.சா.4 |
| 4. | அ.சா.ஆ.4 | 18.05.2026 | முதல்தகவல் அறிக்கை | அ.சா.4 |
| 5. | அ.சா.ஆ.5 | 18.05.2026 | பார்வை மகஜர் | அ.சா.4 |
| 6. | அ.சா.ஆ.6 | 18.05.2026 | மாதிரி வரைபடம் | அ.சா.4 |

**எதிரி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : ஏதுமில்லை.**
**அரசு தரப்புச் சான்று பொருள் : ஏதுமில்லை.**
**குறிப்பு :**

1. எதிரி பிணையில் உள்ளார்.
2. சாட்சிகள் யாரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்புரை குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.06 16:15:19 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு